குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

சூலூர், கோயமுத்தூர்.

முன்னிலை: திரு.**T**.அருண்குமார்,**M.A.,M.L.,M.B.A.,**

நீதித்துறை நடுவர்

சூலூர்

2026 ம் ஆண்டு, ஜூன் மாதம் 5-ம் நாள், வெள்ளிக்கிழமை

ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.554/2025

**தமிழ்நாடு அரசு சார்பாக:-**

அரசுக்காக, காவல் ஆய்வாளர் அவர்கள்,

சூலூர் காவல் நிலையம்,

கோயமுத்தூர் மாவட்டம்.

(குற்ற எண்.307/2025). ...குற்றமுறையிடுபவர்

/எதிர்/

Pradeep Kumar (22/2025),

S/o. Marimuthu,

37, 3rd Street, Balasubramaniyam Nagar,

Puliyankulam, Coimbatore. ..எதிரி

இவ்வழக்கானது 29.07.2025 அன்று சுருக்குமுறை விசாரணை வழக்கு 554/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்கு 05.06.2026 அன்று வந்த போது, அரசு தரப்பில் திருமதி.R.செந்தமிழ்செல்வி,B.A.,B.L., அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திரு.E.கோபாலகிருஷ்ணன் எம்.பி.ஏ., எல்.எல்.பி., வழக்கறிஞர் ஆஜராகியும், இரு

தரப்பு வாதம், பிரதிவாதம் கேட்டும், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்:-

**//தீர்ப்புரை//**

(1).**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-**

கடந்த 31.03.2025 ம் தேதி காலை 08.40 மணிக்கு சூலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சூலூர் ஸ்ரி ராம் மளிகை கடை அருகில் இவ்வழக்கின் வாதியை எதிரி பிரதீப் குமார் என்பவர் கத்தியை காட்டி மிரட்டி வாதி கழுத்தில் அணிந்திருந்த தங்க செயினில் ரூ.2500/- மதிப்புள்ள அறுந்த சுமார் 2 கிராம் செயினை பறித்து கொண்டு TN 30 CU 8794 என்ற பதிவெண் கொண்ட YAMAHA R15 இருசக்கர வாகனத்தில் நின்றிருந்த எதிரி 1 முபாரக் அலி என்பவருடன் ஏறி தப்பிச்சென்ற குற்றத்திற்காகவும் 1 மற்றும் 2 எதிரிகள் மீது 309 (4) BNS-கீழ் அரசு தரப்பில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2). இவ்வழக்கு கோப்பானது இந்நீதிமன்றத்தில் ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.554/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இரண்டாம் எதிரியானவர் நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார். 1ம் எதிரி அழைப்பானையின் பெயரில் நிதிமன்றத்தில் ஆஜராகினார். வழக்கு ஆவணங்களின் நகல்கள் 230

BNS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, எதிரிகள் மீது 309(4) BNS-கீழான குற்றச்சாட்டு பற்றி வினவிய போது, இரண்டாம் எதிரி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு, தான் குற்றவாளி தான் என்றும், தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்வதாகவும் தெரிவித்தார். ஆகவே இந்நீதிமன்றம் ஒன்றாம் எதிரிக்கு எதிராக இவ்வழக்கு CC 320 2026 ஆக பிரித்தெடுக்கப்பட்டது.

(3). இவ்வழக்கில் அரசு தரப்பில் 309(4) BNS-கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தை எதிரி ஒப்புக் கொண்டு, எவ்விதமான அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி குற்ற ஏற்பு ஒப்புதல் மனு தாக்கல் செய்தார். எதிரி **கு.ப.ம.எண்.01/2026** ஆக தாக்கல் செய்த குற்ற ஏற்பு மனுவில் தான் தெரியாமல் தவறு செய்துவிட்டதாகவும், இதுபோன்ற குற்றங்கள் மேற்கொண்டு செய்யமாட்டேன் என்றும் மேலும் சமுதாயத்தில் திருந்தி வாழ வாய்ப்பு அளிக்குமாறும் கேட்டுக்கொண்டு குறைந்த பட்ச தண்டனை மற்றும் அபராதம் வழங்கும்படி எதிரி தரப்பு வாதத்தை முன்னிலைப்படுத்தினார். எனவே, இவ்வழக்கில் எதிரியின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டும், எதிரி தாமாக முன் வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாலும், அரசு தரப்பில் தாக்கல் செய்த குற்றப் பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 309(4) BNS- கீழான குற்றம் அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டதாக இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**(4).**இறுதியாக, எதிரி 309(4) **BNS**-கீழ் குற்றவாளி என முடிவு செய்து, எதிரிக்கு **1 வருடம் 3 மாதங்கள் (ஒரு வருடம் மூன்று மாதங்கள்)** மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்து 278(2) **BNSS**-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் எதிரி ரூபாய்.1000/- அபராதம் செலுத்த உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில 1 மாத காலம் மெய்காவல் சிறைதண்டனை விதிக்கப்படுகிறது. மேலும், மேற்படி எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான 03.04.2025 முதல் 05.06.2026 வரையிலான நாட்களை தண்டனை காலத்தில் இருந்து 468 **BNSS**-ன் கீழ் கழித்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. எதிரி ஏற்கனவே **SC** 322/2024 வழக்கில் தண்டனைபெற்று சிறையில் இருந்துவருவதாக தெரிவித்தார், மேற்கூறிய வழக்கில் இவ்வழக்கு தண்டனையில் சேர்ந்து அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது (**Concurrently**).

**(5).**இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்து குறித்தான உத்தரவு **CC** 320 2026 வழக்கில் பகரப்படும்.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை இத்தீர்ப்பு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

குறிப்பு: எதிரி அபராத தொகை செலுத்தவில்லை.

ஒம்./-T.அருண்குமார்

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**<u>அரசு தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>**:- இல்லை

**<u>அரசு தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u>**:- இல்லை

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருட்களின் பட்டியல்:</u>**--இல்லை-

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் பட்டியல்:</u>**- -இல்லை-

**<u>பின் குறிப்பு:</u>**-

1) வழக்கின் முடிவு அரசு தரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

2) எதிரிக்கு தண்டனை வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்டது.

ஒம்./-T.அருண்குமார்

**நீதித்துறை நடுவர்,**

**சூலூர்.**